## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.
## அசல் வழக்கு எண். 199/2019

2025–ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10–ம் நாள் செவ்வாய்க்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 10.06.2025 | தகப்பனார் பெயர்: | நாராயணசாமி |
| பெயர்: | கணேசன் (PW-1 Cross ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | நெப்பத்துூர் | சமயம்: | |
| தொழில்: | விவசாயம் | வயது : | 63/2025 |

1 மற்றும் 2–ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :10.06.2025

**1.** வா.சா.ஆ.1 என்பது எதற்காக தாக்கல் செய்தேன் என்றால் அதில் கண்டுள்ள சொத்துக்கள் நெப்பத்தூர் பாலசுப்பிரமணிய ஐயர் பண்ணைக்கு பூர்வீகமாக சொந்தமானது என்பதற்காக தான். வா.சா.ஆ. 2அதே பண்ணைக்கு பூர்வீகமாக சொந்தமானது என்பதற்காக தான் தாக்கல் செய்துள்ளேன்.. வா.சா.ஆ.3. ஆவணம் இந்த வழக்கின் 1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் என் மீதும் மற்றவர்கள் மீதும் சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் போடப்பட்ட அசல் வழக்கு எண் 223/2010 என்பதற்கான பிராது நகல் என்றால் சரிதான். மேற்படி அசல் வழக்கில் நான் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன். அந்த எதிர்வழக்ரையை ஞான சுந்தரம் மற்றும் சேகர் ஏற்று கொண்டார்கள் என்றால் சரிதான். மேற்படி அசல் வழக்கு எண்ணில் தாக்கல் செய்யப்பட்ட எதிர் வழக்குரையை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

**2.** என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் மேற்படி அசல் வழக்கு எண் 223/2010 இல் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரை என்றால் சரிதான்.

அந்த எதிர் வழக்குரையிலேயே பாரா 3–ல் கிரைய சாசனம் சரியல்ல அது செல்ல தக்கது அல்ல என்று நான் கட்சி எடுத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த ஆவணம் பி.வா.சா.ஆ.1 ஆகும். கமலாவிற்கு ஜெகதீசன் எழுதிக் கொடுத்த ஆவணம் செல்லாது என்ற விவரம் எனக்கு 2010 ஆம் ஆண்டிலேயே தெரியவந்தது என்றால் சரியல்ல. 2010 ஆம் ஆண்டிலேயே எனக்கு தெரியும் என்றாலும் வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. அதனால் இந்த வழக்கு கால வரையறையால் பாதிக்கப்பட்டிருக்கிறது என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.4–ல் (அ– பதிவேடு) 16 வது காலத்தில் பெயர் என்ற இடத்தில் ஜெகதீசன் மற்றும் இரண்டு பேர் என்று உள்ளது என்றால் சரிதான்.வா.சா.ஆ.5–ல் பட்டாவில் உரிமையாளர்கள் பெயர் என்ற இடத்தில் ஜெகதீசன், நாகராஜன், சிவகுமார் என்று உள்ளது என்றால் சரிதான்.

**3.** சக்தி பிரகாசம் என்பவர் எனது மகன் ஆவார். சக்தி பிரகாசம் பெயரில் 28. 11. 2018 புல எண் 256/2c5 1142 சதுரமீட்டர் மனையை சிவகுமாரிடம் இருந்து கிரயம் பெற்றார் என்றால் சரிதான். அந்த ஆவணத்தின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.2 ஆகும். இந்த வழக்கின் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் ஏற்கனவே சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு அவர்களுக்கு சாதகமாக முடிந்து விட்டது என்றால் சரிதான். மேற்படி அசல் வழக்கின் தீர்ப்பு நகல் பி.வா.சா.ஆ.3 ஆகும். என்னிடம் காட்டப்படுவது மேற்படி வழக்கின் தீர்ப்பாணை தான். அதன் சான்றித நகல் பி.வா.சா.ஆ.4 ஆகும். அந்த வழக்கின் தீர்ப்புக்கு எதிராக நான் சீர்காழி சார்பு நீதிமன்றத்தில் மேல் முறையீடு தாக்கல் செய்து செய்தேன் என்றால் ஆமாம். அந்த மேல்முறையீட்டு வழக்கின் எண் 14/2023 என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனு தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் அந்த மேல்முறையீட்டு வழக்கின் தீர்ப்பு சான்றிட்ட நகல்

என்றால் சரிதான்.. பி.வா.சா.ஆ.5 ஆகும். அந்த மேல்முறையீட்டின் தீர்ப்பாணை சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.6 ஆகும்.

**4.** தற்போது தாக்கல் செய்த வழக்கின் சொத்து நாராயணசாமி குடும்பத்தில் ஏற்பட்ட பாகப்பிரிவினை அடிப்படையில் எனக்கு கிடைத்த சொத்து என்ற அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்து சம்பந்தமாக பதிவு பெற்ற ஆவணங்களோ வருவாய் துறை ஆவணங்களோ பட்டாவோ எனது பெயரில் கிடையாது என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்து சம்பந்தமான வில்லங்கச் சான்று ஏதும் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான. வழக்கு சொத்து என்னிடம் உள்ளது என்பதற்காக சட்டபூர்வமான ஆவணங்கள் ஏதேனும் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. இந்த வழக்கு சொத்தை பொருத்து அசல் வழக்கு எண்223/2010 வழக்கிலேயே உரிமை மூலத்தை பொறுத்து தீர்வு காணப்பட்டு விட்டது என்றால் இல்லை ஏற்கனவே உரிமை மூலம் தீர்வு செய்யப்பட்டு விட்டபடியால் அது முன் தீர்ப்பு தடை என்ற விதத்தில் இந்த வழக்கு செல்லாது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் எடுத்துள்ள கட்சிக்கு மாறாக தற்போது இந்த வழக்கில் கட்சி சொல்லி இருப்பதால் முரண் தடை அடிப்படையிலும் இந்த வழக்கு செல்ல தக்கது அல்ல என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

**5.** எப்போது வாய்மொழியாக பாகப்பிரிவினை ஏற்பட்டது என்று நான் வழக்குரையில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. பாகப்பிரிவினை எப்போது ஏற்பட்டது என்ற விபரத்தை நான் முன்னர் தாக்கல் செய்த அசல் வழக்கு எண்223/ 2010 என்ற வழக்கின் எதிர் வழக்குரையிலோ நிறைவேற்று மனுவில் நான் தாக்கல் செய்துள்ள உ.ந.மு.ச.பிரிவு 47–ன் கீழான மனுவிலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. அந்த வாய்மொழியாக ஏற்பட்ட பாகப்பிரிவினை என்பது நான் வழக்கிற்காக

பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ–1 முதல் வா.சா.ஆ–5 வரை உள்ள ஆவணங்கள் இந்த வழக்கை தீர்மானிக்க கூடிய ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல. 22.02.2010–ல் 1ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கிரைய பத்திரம் செல்லும் என்றும் செல்லாது என்று கேட்பதற்கு எனக்கு அருகதை இல்லை என்று சொன்னாலும் சரியல்ல.22.02.2010 தேதியிட்ட கிரய ஆவணத்தை முதல் பிரதிவாதிக்கு 3ம் பிரதிவாதி உரிமையாளர் என்ற முறையில் தான் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சொத்து எனக்கு தான் உரிமை என்று நான் விளம்புகை பரிகாரம் ஏதும் கேட்டுள்ளேன் என்றால் இல்லை. கிரைய ஆவணம் 2010ல் ஏற்பட்டது என தெரிந்தும் 10 வருடங்கள் கழித்து நான் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் அது செல்லாது என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்து எனக்கு உரிமையானது என கேட்காமல் 1ம் பிரதிவாதிக்கு ஏற்பட்ட கிரயம் செல்லாது என கேட்பதற்கு எனக்கு அருகதை இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ–2. இல் காணப்பட்டுள்ள சொத்துக்கள் பெரும்பாலானவை அதில் கண்டுள்ள பாகஸ்தர்களால் பல நபர்களுக்கு கிரயம் செய்யப்பட்டு விட்டது என்றால் சரியல்ல. அதில் கண்டுள்ள சொத்துக்கள் பண்ணை நிலம் என்று மாறி கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக பல நபர்களுக்கு அது உரிமை ஆகிவிட்டது என்றாலும் சரியல்ல. மேற்படி நிலங்கள் பண்ணையாக இருக்கும் போது மணியம், காவல்காரர், தலையாரி நீர் பாசன பராமரிப்பு மற்றும் வீட்டு வேலைகள் செய்வதற்கு சுமார் 20 க்கு மேற்பட்ட பணியாளர்கள் இருந்தார்கள் என்றால் சரிதான்.

6. பன்னையத்தின் வாரிசுகள் வெளியூர் மற்றும் வெளிநாடுகளில் குடியேறிவிட்டார்கள் என்றால் இரண்டு பேர் மட்டும்தான் வெளியூரில் இருக்கிறார்கள் இங்கு சில பேர் இருக்கிறார்கள். ஜெகதீசனின் மகன்

மற்றும் மகள்கள் பெங்களூருவில் இருக்கிறார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஜெகதீசன் 30 ஆண்டுகளுக்கு மேலாக சீர்காழியில் அவரது சொந்த வீட்டில் குடியிருந்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது இந்த வழக்கு என்பது 1 மற்றும் 2ம் பிரதிவாதிகளின் சொத்தை அபகரிப்பதற்காக போடப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. அதனால் இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 3ம் பிரதிவாதியான ஜெகதீசன் தனியாக கட்சி செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.வா.சா.ஆ.4 ஆவணத்தில் புல எண்.256/2c13–ல் 28 ஏர்ஸ் மட்டும் தான் இதில் இருக்கிறது என்றால் சரிதான்.வா.சா.ஆ.5–ல் மொத்தம் 2 ஹெ. 36 ஏர்ஸ் அதற்குரிய ஆவணம் என்றால் சரிதான். அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றாலும் சரியல்ல.

**3–ம்பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**